SEND IN YOUR NEWS TO

THE EDITOR
THE MORNING STAR

No. 17, Frances Road,
Colomob-06,
Sri Lanka.

# THE MORNING STAR
# உதயதாரகை

**Uthayatharakai**

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*

*Established 1841, A Christian Fortnightly Published Every other Friday*

**Vol. 179 - Jaffna - Friday January 28 2011 No.01**

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people*

THE MORININGSTAR

| | | |
|---|---|---|
| Local | | |
| Annual Subscription | Rs. | 300.00 |
| Life Subscription | Rs. | 2000.00 |

www.csijaffnadiocese.com

Editor
No. 17, Frances Road,
Colomob-06,
Sri Lanka.

## FLOODS IN THE EAST OF SRI LANKA

*Rev. Ruban reporting from Batticaloa*



The heavy rains and floods in the East mainly in Batticaloa and Ampara have caused serious damages harming the lives of thousands of the people. Our pastors Rev. Ruban Sivanantham, Rev. Jerome Paul, and Rev. Kirubainathan, along with other workers in the East themselves are displaced living in the schools. The church at Perianilavani is completely damaged due to the heavy storm a couple of days ago. People are unable to move about and hence using the boats to reach other camps Rev. Ruban informed. There is a shortage of food and dry ration. No facility is available to cook the food and there is a scarcity of cooked food as the number of those who got displaced is in thousands. The Jaffna Diocese is making arrangements to send food items and other relief materials to the East.

## MORE SUPPLY OF BICYCLES TO THE STUDENTS

The adverse weather condition and the floods in the Vanni make life hard especially for the students of Vanni area. The resettlements are mainly in the interior villages far from the schools and the main roads. Many of the main school buildings are either not repaired or under the occupation of the security forces. The students have to use the damaged roads either walking or cycling. Bus services are very irregular owing to the shortage of buses and on the top of everything the condition of the roads and the damaged bridges.



The Jaffna Diocese is trying its best to help these school going children, mainly in the interior villages supplying bicycles. On the 10th of January 2011, twenty five bicycles were distributed to children living in Vattakachchi area. The bicycles were gifted by a well wisher who wants to remain anonymous. The pastors of Vanni are working tirelessly under the leadership of the coordinator of the Centre for Holistic Healing Dr Thaya Thiagarajah and the group of animators working with her.



## TELLIPALLAI CHURCH SHOULD BE A NATIONAL MONUMENT



Tellipallai Church of the Jaffna Diocese of the Church of South India (JDCSI) caught up and marooned within the Northern High Security Zone for thirty years is in a sad and pathetic state. Thanks to the efforts made by Bishop Daniel Thiagarajah there is now the hope of bringing it back to its pristine glory, and more especially to have it renovated and a declared as a national historical monument. With a fast-growing banyan tree, the front gives an Ankhor Wat characteristic. It was in Tellipallai almost 200 years ago Jaffna's forays into modern medicine and education began when the earliest of the missionaries from the US arrived in 1816 and began their services to the community. The memorial grounds next to the church indicate the sacrifice these missionaries made especially the deaths at very young age of their wives.

New Year afternoon was a memorable event with a service of Holy Communion led by Bishop Thiagarajah assisted by the Reverends Sivaguru Joseph, Antony Saverimuttu and Benjamin Jeyarajah with Bible readings rendered in Tamil and Sinhalese and Bishop's message also interpreted in Sinhalese. Among the worshippers were members of the 515 Brigade who had earlier cleaned up the missionary graveyard and the church, which was no easy task, and made it read y for the service. They also provided the chairs for the congregation.



The Rev Catherine Joseph and Thaya Thiagarajah led in the singing of some choruses in three languages and Nithi Kanagartnam sang "Just a closer walk with thee, "as a special. Following the church service, the entire congregation moved to the missionary graveyard for an act of gratitude to the missionaries acknowledging the difference they made to our people at great price, and for the final blessings. He also acknowledged the help rendered by the officers and men of the 515 Brigade and their understanding that this place of worship is precious to us. Although weekly services are not held, Tellipallai being a deserted township, special services are held by the JDCSI from time to time in which Tellipallai residents who live outside the zone participate. We have to be grateful and proud of some historical landmarks in the north and if there is anything so important and memorable in particular, it is the Tellipallai Church. Its renovation along with its mission bungalow will be a grateful testimony of our people to the pioneers of modern medicine and education let alone the Good News of the Gospel they propagated. The previous night the Uduvil Church and surrounds were gaily decorated with electric lamps by the local Brigade 513 and officers and men also participated as or with the community they surprised everyone after the service with gifts and also provided cakes and coffee.

"Man is born free, and everywhere he is in chains."
- Jean Jacques Rousseau.

"We must turn to each other and not on each other."
- Jesse Jackson.

"I believe that unarmed truth and unconditional love will have the final word."
- Martin Luther King, Jr.

## EDITORIAL

Morning Star that counts over a century and a half of existence and the first bilingual newspaper of Asia, we felt must awaken to new realities and dynamism.

During its early years it was virtually a recorder of missionary activities in North Sri Lanka.

Later on it began to speak up for Christian values and also integrate the activities of the local people in its news coverage. Its stand was often quite conservative until it came to the phase of the influence the Jaffna Youth Congress had on the community.

Morning Star's major contribution has been as a historical document of great importance especially of the Christian institutions, the churches, schools and the hospitals and of course the Christian community.

In respect of all these the Morning Star served us well and had as its editors some great scholars who gave their services free as volunteers.

Morning Star will now have to gear up to meet the needs of a community charged with the responsibility to create a new nation that must be founded on peace and goodwill irrespective of the diversities of faiths and cultures. It must fearlessly seek an ethos that will enable every citizen to reach out to each other as equals and in quest of national brotherhood. We as Christians have to be partners in this mission and also have our stables clean and purposeful. We will not ride with those who cause us to stumble on the values that we honour and above all the faith that is precious to us. We will lay the foundation for such

Supported by the experience of elder writers we are placing the Morning Star in the hands of the emerging young leadership of the church, colleges and the community. Their dynamism and visions are crucial to our future.

## A TRIBUTE TO THE REV AND MRS A C THAMBIRAJAH

*By Brothers Christie Richards and Victor Karunairajan*



The year 1945 was a major landmark in our lives. We were village boys of a widowed mum who hardly had any connections that were crucial to the kind of lifestyles that were wished and pursued at that time. What mattered those days was who you were and not what you are for influence to seek opportunities and achieve progress. This was generally an essential factor.

Our mum neither had that nor sought it, she wanted her boys to grow up and earn the successes they desired. Her goal was to give us a good moral and Christian education and committed this in her prayers. Her life was to be our model. And she never "sissied" us into a selfish possessive trap. Parental possessiveness is the most debilitating virus in a child's life.

In 1945 she pulled us out of the local vernacular school, the Saiva Tamil Vidyasalaii and enrolled us at Jaffna College a mile and a half away instead of at the Hindu English School next doors to us. Today this school is a large educational complex, the Vaddukoddai Hindu College.

Elite children largely attended Jaffna College and the hostel facilities, unlike today, were open to mostly the richer kids from the outstations. Thanks to the visions of the Rev John Bicnknell sustained by Principal K A Selliah, poorer and needy children especially from the neighbouring community of Natchandi were able to secure places too; these however were very limited. The fortunate and privileged were the elite children and those of the teachers.

Once when the story of the miller and son was staged, one of us was the donkey; the father and son were teachers' children, two heavy over-sized boys. This largely reflected our station at the school.

Elite children from Colombo, some of them semi-delinquent, also propagated the Bambalawatte slang English unconcerned about the horrible meanings of some of those words. They created a fad of it and looked down on us, the bare-footed village boys who spoke Tamil but our written English unlike theirs was perfect.

We really had to struggle against various odds. The privileged had more than the lion's share even with scholarships indiscriminately granted to favourites sometimes more than one to the same family. Only certain children could use the three pianos at school. Our ambitions were limited to rote learning and securing marks and we were the receiving ends of the ire of some teachers.

Discipline to them meant smashing up the spirited children. One used his hands like helicopter blades when beating up the students immaterial whether boy or girl. Malaysian coconut pluckers use such a method to train monkeys for that job. Elite children and those of the teachers were spared of such humiliating treatment.

Fortunately for us there were a handful of exceptionally committed teachers and even more, there were the Rev and Mrs A C Thambirajah who were in charge of the Vaddukoddai Parish at that time.

Until we joined Jaffna College our family was members of the Chankanai Church and going to church walking through the paddy fields was a cumbersome Sunday task. But our grandmother made sure we did attend church.



At that time Catechist Carpenter Canagasingam was in charge of the Chankanai Church. One Sunday in the month he had an evening service at the nearby Pilawatte ANTM School, the headmaster of which was a dedicated man, Mr Chelliah. Every morning Monday to Friday he would gather children from manual worker families and lead them to school. The circuit priest stationed at Pandateruppu was the Rev G D Thomas. His wife and he were great friends of our family.

Once we began attending Jaffna College we came under the inspirational influence of the Thambirajahs, Pothagar uncle and Arul aunty to us. We developed a great deal of love and affection towards them and they became very special to us. It was at this stage, the Christian impact seeded by our mum and grandma on us, spontaneously took roots. Even in our growing up years we never realized how deeply it was developing within us. Their energy, enthusiasm, wit, love and visions were tonic to us. Church-based activities became meaningful.

We were saddened when they left the church opting for Navajeevanam – New Life - in the far off Wanni. It was a remarkable calling for them. We soon realized God was leading their lives in this foundational task and both of us stayed close to them. Wherever they went and whatever they did they remained our family Pothagar uncle and Pothagar aunty. Very often Navajeevanam was our refuge when we needed a retreat into self-introspection. In later years, whenever we visited Sri Lanka Navajeevanam would be our first call.

Today when Bishop Daniel Thiagarajah leads his mighty efforts to help the Wanni to rise up again, the dream that Pothagar uncle and Arul aunty pursued some fifty years ago gives us great hopes. They were the pioneers who showed the way for us to the Wanni and involved the church in this mission of socio-economic activities and also provided educational skills to needy boys but more than that, a home for them.

It was a tragedy that in the near total destruction of the Wanni, Navajeevanam too became a victim.

How we brothers wish that one day Navajeevanam will rise up as a unique School of Agriculture as part of the Jaffna College complex and hope the Board of Directors of Jaffna College will pursue this ideal. The Navajeevanam family will honour the visions of their parents if they opt for an educational complex in their parents' memory. The Thambirajahs were always loyal to the JDCSI and would never have tolerated any charlatan element to affect their faith. It is but right Navajeevanam becomes the socio-economic arm of the JDCSI in the Wanni.



In the years past children went to school but now the school must go to the people to provide education for all especially to teach skills needed at the grass roots. Jaffna College and Uduvil Girls College have to face this challenging demand by opening up off-campus educational programmes and the Wanni where Navajeevanam was started need this more than any other region in the country.


This feature is our humble tribute to Pothagar uncle and Arul aunty for their inspiring impact on us from our childhood years and what they have meant to our family.

It must truly be God's plan to move the Thambirajas out into the world amidst wild animals and venomous reptiles for such a task and Navajeevanam's ideals have greater meanings today than ever before. Education for development is what we want not the formal kind only that ignores our development potential but facilitates migration that aggravates our problems. We have to pursue solutions and progress.

### தாரகைச் சிந்தனை

"இயேசுவை சபிக்கப்பட்டவராக எண்ணியருந்த பவுல், பின்னர் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டார்."

## பவுலின் மனமாற்றம் - THE CONVERSION OF PAUL



அப்போஸ்தலர் நடபடிகளில் இடம்பெற்றுள்ள பல நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானதும் பலரதும் கவனத்தை ஈர்ந்ததுமான ஒரு விடயம் பவுலின் மனமாற்றறமே. அப்போஸ்தலர் நடபடிகளின் ஆசிரியர் மிகவும் கவனமான முறையில், அதாவது வாசகர்களுக்கு பெரும் உண்மையை உணர்த்த தனது எழுத்தாற்றலின் ஊடாக செய்தியை வெளிக்கொணர்கிறார். சவுல் என்று சொல்லப்பட்ட பவுலை திடிரெனக் காண்பியாது அல்லது அவருடைய மனமாற்ற நிகழ்வை ஒரு அவசர சம்பவம் போன்று காண்பியாது ஒரு படிநிலை வளர்ச்சியின் அடிப்படையில் நூலின் ஆசிரியர் காண்பிக்கின்றார்.

அப்போஸ்தலர் நடபடிகள் நூலை ஊன்றிக் கற்றுக் கொள்ளும் போது 7 : 58 வசனத்தில் - ஸ்தேவானைக் கொலை செய்தவர்களின் மேலுடைகளைப் பாதுகாக்கும் ஒருவராக சவுல் காண்பிக்கப்படுகின்றார். 8 : 1 வசனத்தில் - ஸ்தேவானைக் கொலை செய்வதற்குச் சவுலும் உடன்பட்டிருந்தார் என்ற குறிப்பு உள்ளது. 8 : 3 வசனத்தில் - ஆண்களையும், பெண்களையும் சிறையிலடைத்து, திருச்சபையை அழித்து வந்தார் என்று கூறப்படுகின்றது.

இப் பின்னணியின் அடிப்படையில் தான் 9ம் அதிகாரத்தில் சவுலின் மனமாற்றம் (அழைப்பு) குறித்ததான புரிதலைப் புரிந்துகொள்ள வேண்டும். தமஸ்குவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவும், அவர்களைக் கைது செய்து எருசலேமிற்கு இழுத்துக் கொண்டு வரவும் தலைமைக் குருவிடம் அதிகாரப் பத்திரத்தை வாங்கிக் கொண்டு எருசலேமில் இருந்து ஏறத்தாள 240 கிலோ மீற்றர் தூரத்திலிருந்த தமஸ்கு நோக்கிப் பவுல் சென்றார்.

பவுல் (சவுல்) ஏன் இவ்வாறு சீறியெழுந்து சென்றார் என்பதற்கான காரணத்தையும் நோக்க வேண்டும். பவுல் ஒரே இறைக் கொள்கையில் யூத வைராக்கியம் உடையவர். எனவே இயேசு ஒரு மனிதன். அவர் எப்படிக் கடவுளாக முடியும்? எனவே தான் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினார். அத்துடன் யூத சமயமத்தினின்று புதிய கிளையாகத் தோன்றிய கிறிஸ்தவத்தை முளையிலேயே கிள்ளி எறிய வைராக்கியம் கொண்டார்.

இத்தகைய முனைப்புடன் தமஸ்கு நோக்கிப் பயணப்படும்போது பவுலின் மனதில் ஸ்தேவானின் மரணம் தொடர்பான உணர்வலை நிச்சயமாக அலை மோதிக் கொண்டே இருந்திருக்கும். குற்றமற்ற ஸ்தேவான் கொலை செய்யப்படுவதற்கு நானும் உடன்பட்டிருந்தேனே, மற்றும் ஸ்தேவான் தனது மரணத்தை பொறுமையாக ஏற்று இரத்தச்சாட்சியாக மரித்தாரே இவை தொடர்பான உணர்வலைகள் கண்டிப்பாக பவுலை பாதித்து இருக்கும்.

இந்நிலையில் உயிர்த்த கிறிஸ்து பவுலைச் சந்திக்கிறார். மரித்த இயேசு உயிரோடிருக்கிறார் என்பதைப் பவுல் காண்கிறார். மரணத்தை வென்ற இயேசு மெசியா எனக்காண்கிறார். தமஸ்கு அனுபவம்தான் பவுலின் ஆள்தன்மைக்கும், வாழ்க்கைக்கும், இறையியலுக்கும் காரணமாய் அமைந்தது.

இந்த தமஸ்குவின் அனுபவம்தான், திருச்சபைக்கு கடவுளால் ஒரு பெரும் தலைவர் கிடைக்கக் காரணமாக அமைந்தது. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தச் சென்ற பவுல், கிறிஸ்துவுக்காகத் துன்பப்படத் தன்னையே ஒப்புக்கொடுக்கிறார். எனவேதான் இயேசுகிறிஸ்து தனது நாட்டிற்குள் செய்த திருப்பணியைப் பிற நாடுகளுக்குக் கொண்டு சென்றார் பவுல். அதுமட்டுமல்ல ஆண்டவரின் பணிக்காக கி.பி.64ம் ஆண்டு சிரச்சேதம் செய்யப்பட்டு பவுல் மரித்தார். பவுல் மரித்தாலும் அவரது எழுத்துக்கள் - இறையியல் சிந்தனைகள் இன்றும் எம்முடன் பேசிக் கொண்டே இருக்கின்றன.

(ஜனவரி 25ம் திகதி பவுலின் மனமாற்ற நாள் ஆகும்)

- தயாளன்

## புகற்பராமரிப்பு நிலைய ஒளிவிழா தென்னிந்திய திருச்சபை-நெடுந்தீவு

மேற்படி புகற்பராமரிப்பு நிலையத்தின் ஒளிவிழாவானது, 20.12.2010ம் திகதி திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குரு அருட்பணி ஜெயப்பிரகாசம் தாவீது அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக, அருட்பணி ஜோசெப் குணாளன் தியாகராஜா (தென்னிந்திய திருச்சபை குரு முதல்வர் மலையகம்) கலந்துகொண்டு




சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் உயர்திரு. மு.நந்தகோபால் அவர்களும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி நெடுந்தீவு பொறுப்பாளர் ரஜீவ் தோழர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

எமது திருச்சபையின் ஆதீனப் பிரதிநிதி திரு.எ.அருந்தவசீலன் அவர்களும், எமது பிரதேசத்தின் அரச அரசசார்பற்ற நிறுவனத்தின் ஊழியர்களும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், திருச்சபை மக்கள், பெற்றோர்கள்,



பிள்ளைகள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். இதில் எமது நிலையத்தின் சிறார்கள், ஓய்வு நாட்பாடசாலை பிள்ளைகள், மாலை நேர வகுப்பு மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. இவ்வாறு எமது ஒளிவிழா நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

## ஒளி விழா நிகழ்வு

வீரபுரம் தென்னிந்திய திருச்சபையின் ஒளிவிழா நிகழ்வானது 18.12.2010ம் திகதி மாலை 3.30 மணிக்கு சபைக்குரு அருட்பணி T. தயாளினி அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக, போதகர் S. சேவியர் அருட்பணி S. யூட் எழிலமிழ்தன் ஆகியோர் கலந்து கொண்டனர் தொடர்ந்து மங்கள விளக்கேற்றப்பட்டு சபைக்குருவால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து போதகர் சேவியரால் இறை செய்தி வழங்கப்பட்டது. தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றதுடன், குருவானவரின் நல்லாசியுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன. நிகழ்வின் இறுதியில், தேனீர் விருந்துபசாரம் இடம்பெற்றது.



# பட்டறிவுச் சிந்தனையும், தூரதரிசனமும் அஸ்தமனத்தில் ஓர் விடியல்.

டும்... மௌனம்... ஓயாத துப்பாக்கிச் சூடுகள்... "ஐயோ!" மக்களின் கதறல் "அம்மா! அம்மா!" என் கூக்குரலுக்கு கிடைத்த ஒரே பதில், அமைதி. இருளின் மத்தியில் தயக்கமாக நடந்து சென்றேன், வெறுமனேயிருந்த என் பாதங்களுக்கு பணிவிடை செய்ய ஓடி வந்தது இரத்தம். இருட்டில் என் கண்களுக்கு சற்றும் தெளிவின்றி தெரிந்தது என் தாயாரின் உடல்.

கண்களை விழித்தேன், வியர்வையால் தோய்ந்து கிடந்தது என் உடல். ஏன் கனவு, நிஜத்தை கனவாக தந்த இறைவன் ஏன் தான் வதைக்கிறானோ? ஒரு வருடம் கடந்தும் அந்த கொடுமை நிறைந்த நாளை என் நினைவுகளிலிருந்து அழிக்க முடியவில்லை. ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அதை ஒரு போதும் மறக்க முடியாது.

சிறுவயதிலே தந்தையை இழந்த என்னை பாடுகள் பலவும் பட்டு வளர்த்தது என் தாயார். நாடு கடந்து வாழ்ந்த உறவினர்களுடன் தொடர்புகள் மங்கிபோனதாகக் காணப்பட்ட நிலை, அம்மாவையும் என்னையும் நகமும் சதையும் போலவே நெருக்கமாக பேணியது. போரின் உச்சக்கட்டத்தில் மறுநாள் எம் மண்ணை விட்டுச் செல்வதற்கு ஆயத்தமாக எடுத்து வைத்த பொருட்கள் யாவும் ஓரமாக வைத்துவிட்டு, இறைவனிடத்தில் எம் உயிர்களை ஒப்படைத்துவிட்டு கடைசியாக எம் கட்டில்களில் உறங்க கண்ணீருடன் சென்ற என்னை இன்னமும் கண்ணீர் துரத்துகிறது.

ஒரு ஆண்டாக ஓர் பாடசாலையில் உறவின்றி, நம்பிக்கையின்றி வாழும் எனக்கு தற்கொலை பல தடவைகளிலும் ஈர்த்த வண்ணமே காணப்பட்டது. உயிர் வாழ்ந்தும் என்ன பயன்? முகாமிலிருந்து ஒருநாள் விடுவித்தாலுமே நான் என்ன தான் செய்யமுடியும்? வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாக காணப்பட்டது. இந்நிலையில் வாழ்வதற்கு இறப்பதே சிறப்பாக தோன்றியது. இன்று இவ்வாறே தனிமையைத் தழுவிக்கொண்டு படுக்கையிலிருந்து எழுந்தேன்.

ஐயோ! அம்மா! என்று ஓர் கதறல் என் காதுகளை எட்டியது. எனக்கு அருகாமையில் இருந்ததோர் பாட்டி எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே உட்கார்ந்திருந்தார். "என்ன பாட்டி என்ன நடந்தது?" என வினவிய எனக்கு, அந்த காந்தன் அம்மா போல, கன நாளா ஒரே காய்ச்சல் அதுதான் ஆள் முடிஞ்சு போல, எவ்வளவு உயிர்கள் இறப்பதை பார்த்த எனக்கு அது பெரிசா படவே இல்லை" என்று பதிலளித்தார்.

காந்தன் ஓர் சிறு பையன், ஏழு வயது தன் தாயோடு இங்கு இடம்பெயர்ந்து வாழ்கிறான். என்னுடன் அடிக்கடி மாலை வேளைகளில் உரையாடுவான். உறவுகளற்ற எனக்கு ஏதோ ஓர் வகையில் இவன் ஆறுதலாக இருந்தான். அவன் இருந்த இடத்திற்கு விரைந்தேன். என்னை கட்டிக்கொண்டு கதறினான் அப்பையன். அவன் சோகத்தில் நானும் பங்குபோட்டு கண்ணீரை ஓய்வின்றி ஓட விட்டேன். அவன் சற்று ஆறிய பிற்பாடு நடந்ததைக் கூறினான். நோயுற்ற தன் தாயாரை முன்தினம் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். தகவல்கள் எதுவிமின்றி தவித்த அவனுக்கு காலையில் சர்வ சாதாரணமாக விடயத்தை தெரிவித்திருக்கிறார் ஓர் அதிகாரி.

இருபத்தொரு வயதான எனக்கு சொல்ல முடியாத துயரெனின் அச்சிறுவனின் உள்ளம் எவ்வாறு நொறுங்கியிருக்கும் என்பதை நான் அப்போது உணர்ந்தேன். அவன் என் அணைப்பில் கண்ணயர்ந்தான். அவனை படுக்கையில் கிடத்திய என் கைகளை இறுகப் பிடித்து. சற்று கண்களைத் திறந்து "எனக்கு எல்லாம் இல்லாமல் போச்சு, நீங்க எனக்கு அண்ணா மாதிரி. விட்டுவிட்டு போகாதிங்கோ..." என்று கூறிவிட்டு உறங்கினான்.

சொந்தமின்றி தவித்த எனக்கு அவ்வேளை ஓர் தம்பி கிடைத்துவிட்டான். ஓர் ஏழைக்குத்தான் ஏழையின் கஷ்டம் புரியும் என்றவாறு ஒரு அநாதைக்குத்தான் இன்னோரு அநாதையின் அவல நிலை விளங்கும். மாலையில் தனிமையாக உலாவிய நான் எதிர்காலத்தை குறித்து யோசனை செய்தேன். ஏதேனும் தொழில் புரிந்து காந்தனை பாடசாலைக்கு அனுப்பி படிப்பிக்க வேண்டும் என முடிவு செய்தேன். வானம் செவ்வானமாக மாறியது. அஸ்தமன வேளை என் வாழ்வின் விடியல்.

செல்வி கீதாஞ்சலி தியாகராஜா

# வன்னி வாழ் பாடசாலை மாணவர்களுக்கான அதி முக்கிய தேவைகள்.......

வன்னிப் பிரதேசத்தில் வசிக்கும் மாணவ மாணவிகள் பாடசாலை செல்வதற்கு மிகவும் கடினமான நிலையில் உள்ளனர். பல பாடசாலைகள் பாதுகாப்புப் படையினர்களால் தற்காலிகமாக தமது முகாம்களாக பயன்படுத்திக் கொண்டிருப்பதனால், பாடசாலை வசதிகள் தேடி தூர இடத்திற்கு பல கிலோமீற்றர் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் வன்னிக் குடும்பங்கள் அந்தப் பிரதேசத்தில் நடந்த அழிவு காரணத்தினால், தமது வீடுகளையும் உடமைகளையும் இழந்திருக்கின்றார்கள். அதிகமான மாணவர்கள் நடந்த போரினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கானோர் அங்கவீனர்களாக கால்களையும் கைகளையும் இழந்திருக்கின்றனர். இவர்களில் பலர் தற்பொழுது (Jaipur Limbs) செயற்கை உறுப்புக்களை பாவிக்கின்றனர்.

வன்னிப் பிரதேசத்தில் பரிதாபமான நிலையில் உள்ள மாணவர்களுக்கு எமது சமுதாயம் உதவி செய்ய வேண்டிய பெரும் கடமை உள்ளது. தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனம் இப்பேர்ப்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு பல துவிச்சக்கரவண்டிகளை அன்பளித்து செய்து வருகின்றது. ஆனால் எமக்கு நூற்றுக்கணக்கான துவிச்சக்கரவண்டிகள் தேவையாகவுள்ளது. இம் மாணவர்களுக்கோ அவர்களின் குடும்பங்களுக்கோ



இவ் வண்டியை விலை கொடுத்து வாங்குவதற்கு வசதிகள் இல்லை. இவர்களுக்கு உதவி அளிப்பது எமது சமுதாயத்தின் முதற் கடமை. இந்த மாணவர்கள் எமது சமுதாயத்தின் வருங்கால சந்ததி. தமிழ் மக்களின் வருங்கால கனவை இந்த மாணவர்கள் மத்தியில் இருந்து தான் வளர்த்தெடுக்கவேண்டும். இலங்கையில் இருக்கும் தமிழர்களும் கனடா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிஸ்லாந்து, நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகளில் வசித்து வரும் தமிழர்கள் வன்னியில் இருக்கும் மாணவச் செல்வங்களுக்கு உதவி செய்ய முன் வர வேண்டும். முக்கியமாக அவர்களது தேவை துவிச்சக்கரவண்டி மற்றும் பாடசாலை உபகரணங்கள் ஆகும்.

இம் மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் தயவு செய்து தென்னிந்திய திருச்சபையின் அதி வணக்கத்திற்குரிய பேராயர் டானியல் தியாகராஜா அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இல. 17, பிரான்சிஸ் வீதி,,
வெள்ளவத்தை, கொழும்பு - 06

செல்வி. சாமுவேல் ராதா

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வழிபாடு

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 18ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரமாக அனுசரிக்கப்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்த விடயமாகும். இவ் ஒன்றிப்பு வாரத்தில் திருச்சபை வேறுபாடுகள் கடந்து, வெவ்வேறு சபைகளில் வழிபாடுகள் நடாத்துவது, அருளுரையாற்றுவது போன்ற விடயங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றமும் றோமன் கத்தோலிக்க தேசிய ஒன்றித்தல் மற்றும் உரையாடல் ஆணையமும் ஒன்றிணைந்து 23.01.2011ம் திகதியன்று கொள்ளுப்பிட்டிய மெதடிஸ்த ஆலயத்தில் மாலை 5.30 மணிக்கு ஒரு சிறப்பு வழிபாட்டை ஒழுங்கு செய்திருந்தனர். இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் திருச்சபையின் தலைவர்களினாலும், குருமார்களினாலும் இவ் வழிபாடு நடாத்தப்பட்டது. தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதினத்தின் பேராயரின் பிரதிநிதியாக கொழும்புப் பிராந்தியக்குரு அருட்பணி V.பத்மதயாளன் அவர்கள் இவ் வழிபாட்டில் பங்கெடுத்திருந்தார்.

இக் கிறிஸ்தவ ஒன்றிப்பு வழிபாட்டில் பல திருச்சபைகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டமை சிறப்பிற்குரியதாகும்.

## கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஜெபவார வரலாற்று திறவுகோல் தினங்கள்.

1740 : பெந்தகொஸ்தே இயக்கம் வட அமெரிக்காவுடன் இணைந்து ஸ்கொந்லாந்தில் உதயமாகியது. அதன் மறுமலர்ச்சி செய்தியில் அனைத்து திருச்சபைகளுடன் கூடிய ஜெபம் உள்ளடக்கப்பட்டது.

1867 : இங்கிலாந்து திருஅவை பேராயர்களின் முதலாவது லெம்பத் மாநாட்டில் ஒன்றிய ஜெபத்தின் மீள பரிசீலனை வலியுறுத்தப்பட்டது.

1894 : போப் லியோ XIII என்பவர் ஒன்றியத்துக்கான ஜெப வாரத்தை பெந்தெகொஸ்தே கூட்டமைப்பில் பயிற்றுவிக்க ஊக்குவித்தார்.

1908 : முதலாவது 'திருச்சபை ஒன்றிய வாரம்' அருட்பணி போல் வொட்சன் அவர்களின் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ச்சி ....... 5ம் பக்கம்

## ஒளிவிழா, நத்தார் இன்னிசை வழிபாடு

செட்டிக்குளம் தென்னிந்திய திருச்சபையின் ஒளிவிழா நத்தார் இன்னிசை வழிபாடு 30.12.2010ம் திகதி மாலை 3.30 மணிக்கு, சபைக்குரு அருட்பணி தி.தயாளினி அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் சிறப்பு



விருந்தினர்களாக, திரு.இ.யேசுதாசன் (அதிபர்), திரு.பெர்னாண்டோ, திரு.குலசூரிய, திரு.சுப்ரமாது, அருட்பணி S. யூட் எழிலமிழ்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களால் மங்கள விளக்கேற்றப்பட்டு, சபைக்குருவால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. இவ்விழாவில் அடப்பன் குள திருச்சபைக் குரு அருட்பணி யூட் எழிலமிழதன் இறை செய்தியை வழங்கினார். ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளினாலும், பாடகர் குழாமினாலும் பாடல்கள் பாடப்பட்டதுடன், நடனங்களும் நிகழ்த்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. இறுதியாக சபைக்குருவின் நல்லாசியுடனும் தேனீர் விருந்துடனும், நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவு பெற்றன.



## ஞாபகார்த்த வழிபாடு

2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்த அமரர் C.D. சின்னக்கோன் அவர்களின் வாழ்விற்கு நன்றி செலுத்தும் ஞாபகார்த்த வழிபாடானது 12.12.2010ம் திகதியன்று கொழும்பு தென்னிந்திய திருச்சபையில் பேராயர் அறிவர் டானியல் S.தியாகராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

திருமறைப் பாடங்களை திருமதி G.சின்னக்கோன் (சங்கீதம் 90 : 1-4, 12-17) திரு. சந்திரராஜன் அரியரட்ணம் (2 கொரிந்தியர் 5 : 1-10) அருட்பணி J.G.தியாகராஜா (தூய யோவான் 14: 1-3, 18-19, 25-27) ஆகியோர் வாசித்தனர்.

விசேட பாடலை கொழும்புத் திருச்சபையின் பாடகர் குழுவினர் பாடினர். யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் திரு.நோயல் A.விமலேந்திரன் அவர்கள் ஞாபகார்த்த உரையாற்றினார்.

அமரரின் பேரப்பிள்ளைகளினால் எழுதப்பட்ட புகழுரையை திருமதி G.சின்னக்கோன் அவர்கள் வாசித்தார். இறை செய்தியை சட்டத்தரணியும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. M.A சுமந்தரன் அவர்கள் ஆற்றினார்.

நன்றி மன்றாட்டு இறைவேண்டலை கொழும்புத் திருச்சபைக் குரு அருட்பணி V.பத்மதயாளன் ஏறெடுத்தார். இவ்வழிபாட்டில் அமரர் C.D.சின்னக்கோன் அவர்களின் நண்பர்கள், உறவினர்கள், ஏனைய திருச்சபையைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் பங்கெடுத்து இருந்தனர்.

குட்டிக்கதை

## "... ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்..."

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி விரைந்து கொண்டிருந்தது பேருந்து. அதிகாலை என்பதால் தூர இடம் செல்லும் பிரயாணிகள் அதிகமாகக் காணப்பட்டனர். இருக்கைகள் கிடைக்கவில்லையே என்று பல பிரயாணிகளுக்கு மட்டற்ற கவலை.

கந்தளாய் தரிப்பிடத்தில் பேருந்து நின்றது. பரோபகார சிந்தனை கொண்ட நடத்துனர், மேலும் பல பயணிகளைப் பேருந்தினுள் திணித்துக்கொண்டார்.

முதியவர் ஒருவர் "கதாயுத்தத்தைப் பறி கொடுத்த அனுமன் போல்" பேருந்துக்குள் தவற விட்ட நடை பொல்லுக்காகத் தவித்துக்கொண்டிருக்கின்றார்.

"இந்த நெரிசலில் நீங்கள் விடமாட்டீர்கள் அப்பு. பதிலாக இறங்கும் போது உங்கள் கூனும் நிமிர்ந்துவிடும். ஊன்று கோலும் தேவைப்படாது" என்று கிண்டல் செய்தான் அருகில் நின்று கிறுக்கன்.

இளைஞர்கள், யுவதிகள், நடுத்தர வயதினரென பலர் இருக்கைகளில் இருந்தபோதிலும், யாரும் முதியவருக்கு இடம் தருவதாகத் தெரியவில்லை.

சற்று முன் நோக்கிச் சென்ற முதியவரை வாட்ட சாட்டமாகக் காணப்பட்ட ஆசாமி ஒருவர் பார்த்து புன்னகைத்தார். ஏன்? என் பக்கத்தில் வந்தார் என எண்ணிக் கொண்டாரோ, கஷ்டப்பட்டு எழுந்து முதியவருக்கு அமர தன் இடத்தைக் கொடுத்தார்.

நீண்ட தூரம் ஓடிய பேருந்து பல்வெஹெர தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டது.

தேனீர் அருந்துவதற்காக பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டிறங்கினார்கள்.

முதியவருக்கு இருக்க ஆசனம் கொடுத்தவர் சிறிது பொறுத்திருந்து முதியவரை தேனீர் குடிக்க அழைக்கிறார். முதியவர் புன்னகையுடன் மறுக்க, அவர் தேனீர் பருகுவதற்காக பேருந்தை விட்டு கீழே இறங்குகிறார். அப்பொழுதுதான் அவதானிக்கிறேன் அவருக்கு இரண்டும் செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளதை.

"... ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்..."

-நெடுந்தீவு இரா.தர்மலிங்கம்.

## கொழும்புத் திருச்சபையின் சமூகப்பணி




கொழும்பு தென்னிந்திய திருச்சபையானது தனது சமூகப்பணியாக இலவச மாலை நேர வகுப்புக்களை மிகவும் சிறப்பான முறையில் நடாத்தி வருகின்றது. இச் செயற்பாட்டினால், பல மாணவர்கள் பயனடைந்து வருகின்றமை சிறப்பிற்குரியதாகும். மேலும் இம் மாணவர்களுக்கான ஒளிவிழா நிகழ்வானது 20.12.2010ம் திகதியன்று சிறப்பான முறையில் நடைபெற்றது. திருச்சபை மக்களுடன் மாணவர்களின் பெற்றோர்கள், நண்பர்கள் உட்பட பெரும் திரளான மக்கள் இந் நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர்.

4ம் பக்கத் தொடர்ச்சி .......

1968 : உலக திருச்சபை மாநாட்டின் விசுவாசமும் ஒழுங்காற்றல் ஆணையமும், கிறிஸ்தவ ஒன்றிய ஊக்குவிப்பு செயலகமும் (இன்று கிறிஸ்தவ மதத்தலைவர் மன்றம்) ஒன்றிணைந்து அதிகார பூர்வமான ஜெபவார பிரதிகளை தயாரித்தனர். முதன்முதலாக ஜெபவாரத்திற்கான மூலப்பிரதிகள் உள்ளூர் சபை (ஒருமைப்பாட்டு அல்லது ஒன்றிய) குழுவினரால் தயாரிக்கப்பட்டது. மேற்படி திட்டமானது அவுஸ்திரேலிய நாட்டு குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

2008 : கிறிஸ்தவ ஒன்றிய ஜெபபார நூற்றாண்டு நினைவு விழா கொண்டாடப்பட்டது. 'திருச்சபை ஒன்றிய வாரம்' முதன்முதலாக 1908இல் முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

## NEW YEAR LUNCH AT THE PSYCHIATRIC HOSPITAL AT TELLIPPALAI



Patients of the Tellipallai Psychiatric Hospital were treated to a grand Christmas Tree event led by S R Jesupalan at which many participated from the community. The evening was marked by a great deal of singing and dancing in which the patients participated spontaneously. Their enthusiasm was such; they danced and sang late into the night. They would have danced all night.

The JDCSI treated them to lunch on New Year's Day and this operation was carried out by RevBenjamin Jeyarajah, Victor Jeyakumar and Pradeep Kumar. Mr Jeyakumar who participated in the cooking of the main dish in the backyard of Bishop's House, Vaddukoddai commented that treating these patients was an overwhelming experiece for him and a great way to begin a New Year.



## FESTIVE EVENING AT THE COLOMBO CHURCH

Children and young people of the Colombo JDCSI Church treated themselves to a gala evening Tuesday December 21 at the Parish Hall. It was true to the traditions with singing, dancing and even skits all with the message of Christmas. The children from the kiddies to teenagers performed these spontaneously sans all sophistication. The joy they generated among themselves and their parents and friends was immense. Santa too made his presence despite inclement weather in the regions of the North Pole.



The teachers and elders headed by the parish priest, the Rev V Pathmathayalan were audience-participants with the young leaders in charge of the evening. They accounted themselves excellently and the talents they are endowed with was quite obvious. The young people in our churches hail from a cross-section of the society and their emergence from the grass roots is quite evident. As one observer commented, the ground is breaking wit a new hope for the country under the leadership of Bishop Daniel Thiagarajah.

## REFLECTIONS & VISIONS
### DAWN AMIDST DARKNESS

*By Gita Thiagarajah*

Boom……silence…..wailing shells… my first thought was of my mother. "Amma" I called out but received no response. Louder and frantic I called and my cry echoed back to me. Trying to maintain my calm I got up and walked into the hallway. My bare feet stepped on thick moisture, and as my senses became alert I smelt what I dreaded, blood. As my eyes adjusted to the darkness I found my mother's frail body lifeless on the floor.

I woke up bathed in sweat and with a pounding heart. Flashbacks are even more traumatizing than reality. Almost every night my past would haunt me and yet the fear and horror of it was real every time.

In history my mother was just another innocent victim but to me I lost the only family I had. My father died when I was six and I grew up an only child. We had relatives abroad but contact was limited and faded slowly. My mother, a school teacher worked hard and brought me up in reasonable comfort. I wasn't a bad student but the raging war had put a stop to my education. The loss of my mother made me lose every emotion I held within myself, now at the IDP camp I was spiraling into depression. I had attempted suicide many times but somehow failed, fortunately no one found out. Of course no one really cares these days.

A loud cry interrupted my daze. "Why have you left me?" the voice of the little boy kept hysterically growing louder. I turned to the old lady next to my bed and asked what the commotion was all about. "Haven't you heard? You know that boy Karthik, his mother died in hospital yesterday and today only the army officer has told him. You know thambi these days you just can't sympathize anymore, I'm just used to all of it" the casual tone of the old lady didn't surprise me. What can one expect from people who have experienced unspeakable horrors? The brutality cannot be even comprehended.

Karthik, a boy of six came to the IDP camp with his mother. His mother was taken to the hospital because of fever. She often lamented about her husband's death and how she was to bring up the boy by herself. Now this boy was orphaned like me. I went to him and found him sprawled on his bed weeping; I laid a gentle hand on him. He immediately embraced me and shuddered with pain and horror.

I spent the entire day with him, trying to comfort him, but he was inconsolable. As evening came the exhausted boy fell asleep in my arms and as I lay him down he mumbled "Anna, I have only you don't leave me." I knew then that this is why I was spared. My loneliness and helplessness vanished at that moment. I completely accepted Karthik as my own brother and as I watched the sky burst with the amazing hues of the sunset, I promised myself I would do everything I could to make both our lives meaningful and worth living. As the night approached my life dawned into a whole new chapter.

## AUSSIE CHILDREN ARE PRIME EXAMPLE



### CHRISTMAS , CHILDREN AND CHRISTIANITY

During a short holiday in Sri Lanka, Vijayan, Nilani and their three daughters visited Jaffna particularly to visit our children at the Homes in Uduvil and Pandateruppu. Not only did they spontaneously befriended the children they also entertained to lunch, following with they gave gifts to them. The event was smart with a grate deal of dancing and singing in which all the children freely participated. The Australian children grately heartened by this experience and they are looking forward to continue their relationship with these girls from the Girls' Homes. Nilani is the daughter of Kingsely and Rev. Mrs. Angela Thambiappa